

# புனித லூர்து மாதா தேவாலயம்



45, ஜாலான் சிலிபின், 30100 ஈப்போ, மேற்கு மலேசியா

**பங்கின் குருவானவர்கள்: அருள் தந். ரோபட் டேனியல் & அருள் தந். சைமன் ஆனந்த்**

Tel: 05-5279349 Fax: 05-5276671

அகப்பக்கம்: lourdesipoh.org மின் அஞ்சல்:olol@ololipoh.org

**திருத்தந்தையின் கருத்து** : பங்குகள்: நமது பங்குகள், மறைபரப்பும் ஆவியால் உந்தப்பட்டு, விசுவாசம் பரப்பப்பட்டு, தர்மம் காணப்படும் இடங்களாக வேண்டுமென்று

**செப்டம்பர் மாத கரு** : சுய உருமாற்றம்

## பங்கில் திருப்பலிகள்

| தேதி | நேரம் | திருப்பலிகள் | விளக்கம் |
|---|---|---|---|
| செப் 3 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்காலம் 22ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்காலம் 22ஆம் ஞாயிறு |
| | மாலை 6.00 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்: கொடியேற்றம் |
| செப் 4 திங் | காலை 6.30 | திருப்பலி (ஆ) | பொதுக்கால வாரநாள் |
| | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | அன்னை வேளாங்கண்ணி 2 |
| செப் 5 செவ் | மாலை 6.30 | திருப்பலி (ஆ) | கொல்கொத்தா புனித தெரேசா |
| | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | அன்னை வேளாங்கண்ணி 3 |
| செப் 6 புதன் | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | அன்னை வேளாங்கண்ணி 4 |
| செப் 7 வியா | காலை 6.30 | திருப்பலி (த) | பொதுக்கால வாரநாள் |
| | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | அன்னை வேளாங்கண்ணி 5 |
| செப் 8 வெள் | மாலை 6.30 | திருப்பலி (த) | மரியாவின் பிறப்பு |
| | மாலை 7.00 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | அன்னை வேளாங்கண்ணி 6 |
| செப் 9 சனி | காலை 6.30 | திருப்பலி (ஆ) | புனித பீட்டர் கிளாவர் |
| | காலை 11.00 | திருமணம் (த) | ஸ்டீவன் பிரகாஷ் ஜோசப் & சுபாஷினி செல்வராஜு |
| | மாலை 6.00 | நவநாள்/ திருப்பலி (ஆ, த) | அன்னை வேளாங்கண்ணி திருவிழா |
| செப் 10 ஞா | காலை 7.00 | திருப்பலி (த) | பொதுக்காலம் 23ஆம் ஞாயிறு |
| | காலை 9.00 | திருப்பலி (ஆ, ம) | பொதுக்காலம் 23ஆம் ஞாயிறு |

## பங்கு நடவடிக்கைகள்

| | | | |
|---|---|---|---|
| செப் 5 செவ் | காலை 8.30 | பெர். மை 1-3 | பங்கு பரிந்துரை குழு |
| செப் 6 புதன் | மாலை 8.00 | ஆலயம் | புனித அகஸ்டின் பாடல்குழு பயிற்சி (த) |
| செப் 7 வியா | மாலை 7.00 | ஆலயம் | முன்னோன் வாசகர் பயிற்சி |
| | மாலை 7.30 | பெர். மை 2-2 | RCIA |
| செப் 8 வெள் | மாலை 7.30 | ஆலயம் | குழந்தைகள் திருமுழுக்கு விளக்கவுரை (பெற்றோர்கள்& ஞானப்பெற்றோர்கள்) |
| | மாலை 7.30 | ஆலயம் | பாடல்குழு (ஆ) |
| செப் 9 சனி | காலை 10.00 | பெர். மை 2-5 | சீடத்துவ நிகழ்வு |
| | மாலை 4.30 | ஆலயம் | குழந்தைகள் திருமுழுக்கு |
| **27 ஆக ~ 10 செப் 2017 வரை மறைக்கல்வி வகுப்புகள் நடைபெறாது. மீண்டும் 17 செப் 2017 வகுப்புகள் வழக்கம் போல் நடைபெறும்.** | | | |

## பங்கு செய்தி மற்றும் தகவல்கள்

**1. தந்தை ரோபின் என்ட்ரூஸ் 80ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம்:** தந்தை ரோபின் என்ட்ரூஸ் 80ஆவது பிறந்த நாள் கொண்டாட்டம் 17/9/2017(ஞாயிறு) மதியம் 12.30க்கு Ipoh, sun Lee How Fook Restaurant-ல் நடைபெறும். வந்து கலந்துக்கொள்ளவும். டிக்கெட் @ ரிம 600/- & ரிம 500/- ஒரு மேசைக்கு இப்போது கிடைக்கும். தயவு செய்து மேல் விவரங்களுக்கு ஏற்பாட்டு குழுவை தொடர்புக் கொள்ளவும். 1) ஸ்டீபன் kk Ng: 012-5015693
2) ஜூலி குவா: 012-5060935 3) ஜோசப்பின் லிம் - 012-5025567

**2. காணிக்கை ஒப்புக்கொடுத்தல்:** திருப்பலியின்போது காணிக்கை ஒப்புக்கொடுக்க விரும்புவோர், தயவு செய்து பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும்.

**3. ஒரு முறை இழந்தது; எப்போதும் இழந்தது!** : ஆலயத்தின் உள்ளே அல்லது ஆலயத்தின் வெளிப்புறத்திலோ அல்லது உங்கள் வாகனங்களிலோ உங்கள் தனிப்பட்ட உடைமைகளை கவனமாக பார்த்துக்கொள்ளுங்கள். உங்கள் வாகனங்கள் பூட்டப்பட்டிருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். உங்கள் தலை கவசம்(Helmets) உள்பட உங்கள் விலைமதிப்பற்ற பொருட்களை விட்டுவிடாதீர்கள். உங்களின் அலட்சியத்திற்கு ஆலயம் பொறுப்பேற்காது.

**4. இறந்தவர்களுக்கான புகழுரை**: அடக்க சடங்கு மற்றும் திருப்பலிக்கான அனைத்து புகழுரைகளும் குருவானவர்களின் கவனத்திற்கு சமர்பிக்கப்பட வேண்டும். எழுத்துப்பூர்வமான புகழுரைகள் மட்டுமே அனுமதிக்கப்படும். ஒவ்வொரு அடக்க சடங்கிற்கும் ஒரு புகழுரை மட்டுமே அனுமதிக்கப்படும்.

**5. பங்கு மேய்ப்புப்பணி மாநாடு 2017**: நாள்: 29 அக் 2017 (ஞாயிறு) நேரம்: மதியம் 12.00 ~ மாலை 5.00 இடம்: பெர். மையம். பமேப குழுவால் நியமிக்கப்பட்ட அனைத்து அதிச மற்றும் பணிக்குழுக்கள் மற்றும் அனைத்து தலைவர்களும், துணைத் தலைவர்களும் இந்த பங்கு மாநாட்டிற்கு அழைக்கப்படுகிறீர்கள். அழைப்பிதல் கொடுக்கப்பட்டிருக்கிறது. அழைப்பிதலை பூர்த்தி செய்து 12 செப் 2017க்கு முன்பாக பங்கு அலுவலகத்தில் சமர்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**6. பங்கு திட்டமிடுதல் 2018**: அடுத்த வருடத்திற்கான நமது பங்கு கருத்து: **கருணை & தன்னலமற்ற சேவை.** அனைத்து பங்கு பணிக்குழுக்கள் மற்றும் அதிச தயவு செய்து பங்கு கருத்தையொட்டியதாக உங்களது நிகழ்வையும், செயல்பாடுகளையும் திட்டமிடுங்கள். அனைத்து திட்டங்களும் 30/9/17க்கு முன்பாக பங்கு அலுவலகத்தில் சமர்பிக்கவும். தலைவர்கள் அவர்களின் திட்டங்களை சமர்பிக்கும் முன்பு பங்கு குருவானவரை சந்திக்க கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

7. **முக்கிய அறிவிப்பு, புனித மைக்கல் ஆலயத்தின் திருப்பலி ஒப்புக்கொடுத்தல் உறைகளை சிலர் தவறாக பயன்படுத்துகின்றனர்:** எந்தவொரு நோக்கத்திற்காகவும், திருப்பலி ஒப்புக்கொடுத்தலுக்காகவும் ஈப்போ, புனித மைக்கல் ஆலயம் சார்பாக எந்தவொரு நன்கொடைகளையும் வசூலிப்பதற்கு தந்தை ஸ்டீபன் லீயூவ் யாரையும் அங்கிகரிக்கவில்லை என்பதை தயவு செய்து தெரிந்துக்கொள்ளவும்.

**8. தயவு செய்து திருவழிப்பாட்டு நல்லொழுக்கத்தை கடைப்பிடியுங்கள்**: திருவழிப்பாட்டு கொண்டாட்டத்தில் மரியாதை குறைவாக நடப்பதை பார்க்கும் போது என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆலயத்தில் சிலர் இன்னும் கைப்பேசியை பயன்படுத்துகின்றனர். சிலர் நற்கருணை வழிப்பாட்டின் போது நடந்துக்கொண்டிருக்கின்றனர். சிலர் நற்கருணையை பெறும்போது "ஆமென்" என்றும் சொல்வதில்லை. சிலர் எடுத்துக்கொண்டு நடக்கின்றனர் ஆனால் உண்ணுவதில்லை. ஆலயத்தில் நாம் புனிதமாக இருக்க கற்றுக்கொள்ள வேண்டும் என நினைக்கிறேன்.

**9. ஒருங்கிணைந்த இறையியல் கல்வி சான்றிதழ் 2:** அனைவருக்குமானது! நான்கு உற்சாகமான, பாடத்தொகுதிகள்: வத்திக்கான் சங்கம் II, திருச்சபை வரலாறு, மறைப்பணி இறையியல், மற்றும் நன்னெறி இறையியல். 14/10/17 தொடங்குகிறது. விரிவுரைகள் மாதத்தில் இரு சனிக்கிழமைகளில் நடைபெறும். (காலை 9.00 ~ மதியம் 1.00 வரை) இடம்: புலூமாதே, சிலிபின், ஈப்போ. கட்டணம்: ரிம 400/- @ ஒரு பாடம் ரிம 100/- பங்கேற்பாளர்கள் ஒரு பாடத்தை மட்டும் தேர்ந்தெடுத்து அதற்கேற்ப பணம் செலுத்தலாம். எல்லா நான்கு பாடங்களையும் முடித்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும். கையேடுகளை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். அல்லது http://www.pdpinstitute.org.
தொடர்புக்கு: 04-2611350 (திங்~வெள் அலுவலக நேரம்)

**10. அடக்க ஏற்பாடு:** அடுத்த 5 வருடங்களுக்கு தம்பூனில் உள்ள கத்தோலிக்க கல்லறையை புனித சகாய மாதா தேவாலயம் நிர்வாகம் செய்யும். நமது பங்கில் ஏதேனும் மரணம் ஏற்பட்டால் உடனடியாக திருப்பலிக்கான ஏற்பாட்டிற்கு புலூமா பங்கு அலுவலகத்தை தொடர்பு கொள்ளவும். அதன் பிறகு அடக்கத்திற்கான ஏற்பாட்டிற்கு நீங்கள் உடனடியாக புனித சகாய மாதா தேவாலயத்தை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும். மற்ற நேரங்களில் தோமஸ் ஜீ (012-5182818) தொடர்பு கொள்ளவும்.

**11. தம்பூன் கல்லறையில் அடக்கம் செய்ய இடங்கள்:** தம்பூன் கல்லறையில் தற்போது சுமார் 1,000 இடங்களே உள்ளன. இவை சுமார் 10 ஆண்டுகளுக்கு போதுமானவை. நாம் வேறு இடங்களை தேடும் வேளையில், நாம் நமது பங்கு மக்களை தங்களின் பெற்றோர் அல்லது தாத்தா பாட்டிமார்களின் கல்லறைகளில் சாம்பல் துவாரங்களை இட ஊக்குவிக்கிறோம். இவ்வாறு செய்தால் தம்பூன் கல்லறையில் பயன்பாட்டை நீட்டிக்கலாம். ஒவ்வொரு கல்லறையிலும் நீங்கள் 6 துவாரங்கள் இட முடியும். தயவு செய்து சிந்தியுங்கள்!

**12. கிறிஸ்து அரசர் & அன்னை வேளாங்கண்ணி சிற்றாலய கட்டிட நிதி ஆகஸ்டு 2017 வரை:** கிறிஸ்து அரசர் சிற்றாலயம்- **341,489.15** அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம்- **343,049.88** (மாதத்திற்கு ஒருமுறை அன்றைய விபரம் வெளியிடப்படும்)

**27/08/17 திருப்பலி வசூல்கள்:** **காலை 7.00** - RM 1,053.65 **காலை 9.00** - RM 1,520.55 **புந்தோங் 3** - RM 350.00 **மொத்தம்** - RM 2,924.20
**2017** - RM 365.00 **கல்லறை**- RM 1,149.45

நன்கொடைகளை பங்கு அலுவலகத்தில் ஒப்புக்கொடுக்கலாம். காசோலைகளில் புனித லூர்து மாதா தேவாலயம், ஈப்போ என்று ஆங்கிலத்தில் எழுதவும்